சிறப்பு குறிப்பு 11

## முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் 2014[1]

### உண்மைத் துறை[2]

2014 பெப்புருவரி 02 - 400 கிறாம் முழு ஆடைப் பால்மா பையொன்றின் அதிகபட்ச சில்லறை விலையானது ரூ.61 இனால் ரூ.386 இற்கு அதிகரிக்கப்பட்டதுடன் 1 கி.கி முழு ஆடைப் பால்மா பையொன்றின் அதிகபட்சச் சில்லறை விலையானது ரூ.152 இனால் ரூ.962 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2014 செத்தெம்பர் 16 - உள்நாட்டு பாவனையாளர்களுக்கான சராசரி மின் தீர்வை (டி-1) அலகிற்கு 25 சதவீதத்தினால் குறைக்கப்பட்டதுடன் எரிபொருள் சீராக்கக் கட்டணமானது அகற்றப்பட்டது. அதன்படி உள்நாட்டுப் பாவனையாளர் வகைக்கு பிரயோகிக்கக்கூடிய புதிய மின் தீர்வை பின்வருமாறு:

| வீச்சு | நுகர்வு (கி.வா.ம/ மாதம்) | வலுக் கட்டணம் (ரூ./ கி.வா.ம) | நிலையான கட்டணம் (ரூ./ மாதம்) |
|---|---|---|---|
| மாதமொன்றுக்கு 0-60 அலகுகள் | 0-30 | 2.50 | 30.00 |
| | 31-60 | 4.85 | 60.00 |
| மாதமொன்றுக்கு 60 அலகுகளுக்கு மேல் | 0-60 | 7.85 | வி.கி |
| | 61-90 | 10.00 | 90.00 |
| | 91-120 | 27.75 | 480.00 |
| | 121-180 | 32.00 | 480.00 |
| | >180 | 45.00 | 540.00 |

2014 செத்தெம்பர் 17 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு குறைக்கப்பட்டன:

- பெற்றோல் (92 ஒக்தேன்) ரூ.5 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.157 இற்கு
- பெற்றோல் (95 ஒக்தேன்) ரூ.5 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.165 இற்கு
- தன்னியக்க டீசல் ரூ.3 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.118 இற்கு
- சிறப்பு டீசல் ரூ.5 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.140 இற்கு
- மண்ணெண்ணெய் ரூ.20 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.86 இற்கு

2014 ஒத்தோபர் 10 - 12.5 கி.கி திரவப் பெற்றோலிய வாயு உருளையின் விலை ரூ.250 இனால் ரூ.2,146 இற்குக் குறைக்கப்பட்டது.

2014 நவெம்பர் 01 - மாதத்திற்கு 25 அலகு வரை பாவிக்கும் குடியிருப்பு நுகர்வோருக்கு தண்ணீர்த் தீர்வை 10 சதவீதத்தினால் குறைக்கப்பட்டது.

2014 நவெம்பர் 15 - மாதமொன்றிற்கு 300 கி.வா.ம இனை விட குறைவாக நுகரும் “கைத்தொழில்” மற்றும் “பொது நோக்கங்கள்” வகையின் நுகர்வோருக்கான சராசரி மின் தீர்வையானது 25 சதவீதத்தினால் குறைக்கப்பட்டது.

- மாதமொன்றிற்கு 300 கி.வா.ம இனை விட அதிகமாக நுகரும் “கைத்தொழில்” மற்றும் “பொது நோக்கங்கள்” வகையின் நுகர்வோருக்கான சராசரி மின் தீர்வையானது 15 சதவீதத்தினால் குறைக்கப்பட்டது.
- “சுற்றுலாவிடுதிகளிற்கான” சராசரி மின் தீர்வையானது 15 சதவீதத்தினால் குறைக்கப்பட்டது.

1 இது 2014 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளை உள்ளடக்குகின்றது. 2015இன் முதல் மூன்று மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் கிட்டிய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட எதிர்பார்க்கும் கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2 உண்மைத் துறை அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட இறை ஊக்குவிப்புக்களின் விபரங்கள் இறைத் துறையின் கீழ் கொள்கை வழிமுறைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 2014 திசெம்பர் 06 | - | முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு குறைக்கப்பட்டன:<br>- பெற்றோல் (92 ஒக்தேன்) ரூ.7 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.150 இற்கு<br>- பெற்றோல் (95 ஒக்தேன்) ரூ.7 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.158 இற்கு<br>- தன்னியக்க டீசல் ரூ.7 இனால் லீற்றர் ஒன்றிற்கு ரூ.111 இற்கு<br>- சிறப்பு டீசல் ரூ.7 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.133 இற்கு<br>- மண்ணெண்ணெய் ரூ.5 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.81 இற்கு<br>- கைத்தொழில் மண்ணெண்ணெய் ரூ.5 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.110 இற்கு |
| 2014 திசெம்பர் 07 | - | 12.5 கி.கி திரவப் பெற்றோலிய வாயு உருளையின் விலை ரூ.250 இனால் ரூ.1,896 இற்குக் குறைக்கப்பட்டது. |
| 2015 சனவரி 22 | - | முக்கிய பெற்றோலிய உற்பத்தியின் சில்லறை விலைகள் பின்வருமாறு குறைக்கப்பட்டன:<br>- பெற்றோல் (92 ஒக்தேன்) ரூ.33 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.117 இற்கு<br>- பெற்றோல் (95 ஒக்தேன்) ரூ.30 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.128 இற்கு<br>- தன்னியக்க டீசல் ரூ.16 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.95 இற்கு<br>- சிறப்பு டீசல் ரூ.23 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.110 இற்கு<br>- மண்ணெண்ணெய் ரூ.16 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.65 இற்கு<br>- கைத்தொழில் மண்ணெண்ணெய் ரூ.16 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.94 இற்கு |
| 2015 சனவரி 30 | - | மண்ணெண்ணெயின் சில்லறை விலையானது ரூ.6 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.59 இற்கு குறைக்கப்பட்டது. |
| | - | 12.5 கி.கி திரவப் பெற்றோலிய வாயு உருளையின் விலை ரூ.300 இனால் ரூ.1,596 இற்குக் குறைக்கப்பட்டது. |
| 2015 பெப்புருவரி 01 | - | பயணிகள் பேருந்துக் கட்டணங்கள் சராசரியாக 8.2 சதவீதத்தால் குறைக்கப்பட்டன. |
| 2015 பெப்புருவரி 20 | - | குறிப்பிட்ட சில பொருட்களின் ஆகக்கூடிய சில்லறை விலையானது பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டன:<br>- சாதாரண போற்லாண்ட், போற்லாண்ட் சுண்ணாம்பு மற்றும் கட்டுமான சிமெந்து 50 கி.கி. பொதியொன்று ரூ.840 இல்<br>- வெள்ளைச் சீனி (பொதியிடப்படாதது) கி.கி ஒன்றிற்கு ரூ.87 இல்<br>- முழு ஆடைப் பால்மா 400 கிறாம் பொதியொன்று ரூ.325 இலும் 1 கி.கி பொதியொன்று ரூ.810 இலும்<br>- 400 கிராம் சஸ்டோஜன் ரூ.1,500 இல்<br>- கோதுமை மா (பொதியிடப்படாதது) கி.கி ஒன்றிற்கு ரூ.87 இல்<br>- பச்சைப் பயறு கி.கி ஒன்றிற்கு ரூ.265 இல்<br>- நெத்தலிக் கருவாடு (இறக்குமதி செய்யப்பட்டது) கி.கி ஒன்றிற்கு ரூ.385 இல்<br>- தேறிய நிறை 425 கிறாம் அல்லது காய்ந்த நிறை 280 கிறாம் கொண்ட தகரத்தில் அடைக்கப்பட்ட மீனொன்றுக்கு ரூ.140 இலும் தேறிய நிறை 155 கிறாம் அல்லது காய்ந்த நிறை 105 கிறாம் கொண்ட தகரத்தில் அடைக்கப்பட்ட மீனொன்றுக்கு ரூ.70 இலும்<br>- தூளாக்கிய அல்லது அரைத்த கொத்தமல்லி கி.கி ஒன்றிற்கு ரூ.350 இல்<br>- உழுந்து கி.கி ஒன்றுக்கு ரூ.300 இல்<br>- மாசிக் கருவாடு கி.கி ஒன்றுக்கு ரூ.1,740 இல் |

- அரைத்த அல்லது தூளாக்கப்பட்ட மஞ்சள் கி.கி ஒன்றிற்கு ரூ.800 இல்
- அரைத்த அல்லது தூளாக்கப்பட்ட மிளகாய் கி.கி ஒன்றிற்கு ரூ.400 இல்

## வெளிநாட்டுத் துறை

**வர்த்தகமும் தீர்வையும்**

2014 சனவரி 21 - அரசாங்கம் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்விசார் நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் அரச திணைக்களங்களினால் பயன்படுத்தப்படும் தேறல் மதுசாரத்தின் தீர்வையற்ற வரையறையானது ஒரு மாதத்திற்கு 10,000 லீற்றர் என நிர்ணயிக்கப்பட்டது.

2014 பெப்புருவரி 03 - பால்மா இறக்குமதி மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வை தளர்த்தல் கி.கிறாமொன்றிற்கு ரூ.18இலிருந்து கி.கிறாமொன்றுக்கு ரூ.68 இற்கு அதிகரிக்கப்பட்டது. எனவே, ஏற்புடைத்தான தீர்வை வீதம் கி.கிறாமொன்றிற்கு ரூ.57 ஆகும்.

2014 பெப்புருவரி 06 - உடைத்த மைசூர் பருப்புக்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.22 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.5 இற்கு ஐந்து மாத காலப்பகுதிக்குக் குறைக்கப்பட்டது.

2014 பெப்புருவரி 07 - உருளைக்கிழங்கு இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வைகள் கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இற்கு ஐந்து மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது.

2014 மாச்சு 08 - முழு மைசூர் பருப்பு இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.18 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இற்கு ஐந்து மாத காலப்பகுதிக்குக் குறைக்கப்பட்டது.

2014 மாச்சு 17 - சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காய இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கிறாமொன்றிற்கு முறையே ரூ.5 மற்றும் ரூ.10 ஆக ஐந்து மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.

2014 ஏப்பிறல் 09 - அரிசி இறக்குமதி மீதான கி.கிறாமொன்றிற்கு ரூ.20 ஆன சுங்கத் தீர்வை, 12 சதவீத பெறுமதிசேர் வரி, 2 சதவீத தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் 5 சதவீத துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி வரி என்பவற்றிற்கு பதிலாக கி.கிறாமொன்றிற்கு ரூ.5 சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலத்திற்கு விதிக்கப்பட்டது.

2014 ஏப்பிறல் 10 - குழந்தைகளுக்கான பால் உணவுகள் இறக்குமதி மீது 7.5 சதவீத முழு சுங்கத் தீர்வை விலக்கு வழங்கப்பட்டது. எனவே பொருத்தமான தீர்வை வீதமானது 0 சதவீதமாகும்.

2014 ஏப்பிறல் 11 - சோளம் மற்றும் இறுங்கு வகைகளின் இறக்குமதி மீதான 15 சதவீத சுங்கத் தீர்வை, 12 சதவீத பெறுமதிசேர் வரி, 2 சதவீத தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, 5 சதவீத துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி வரி மற்றும் 35 சதவீத செஸ் தீர்வை என்பவற்றிற்குப் பதிலாக கி.கிறாமொன்றிற்கு 10 சதவீத சிறப்புப் பண்டத் தீர்வை இரண்டு மாத காலத்திற்கு அறிமுகம் செய்யப்பட்டது.

2014 மே 22 - பின்வரும் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட சிறப்புப் பண்டத் தீர்வை ஏழு மாத காலப்பகுதிக்குக் குறைக்கப்பட்டது:

- உருளைக்கிழங்கு கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இற்கு
- சீனி கி.கிறாமொன்றிற்கு ரூ.30 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ25 இற்கு

- உடன் அல்லது குளிரூட்டப்பட்ட மீன், மாசிக் கருவாடு, நெத்தலிக் கருவாடு, கருவாடு, யோகட், வெண்ணெய்க்கட்டி, உள்ளி, பட்டாணி, கொண்டைக் கடலை, பாசிப்பயறு, உழுந்து, தட்டைப் பயறு, உடன் தோடம்பழங்கள், திராட்சைகள் மற்றும் அப்பிள்கள், மிளகாயகள், கொத்தமல்லி, நற்சீரகம், பெருஞ்சீரகம் மஞ்சள், வெந்தயம், குரக்கன், குரக்கன் மா, உழுத்த மா, கோதுடனான நிலக்கடலை, கடுகு, மரக்கறி எண்ணெய், மாஜரீன், தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் உப்பு மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஏழு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது.

2014 மே 24 - முழு மைசூர் பருப்பின் இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இலிருந்து ரூ.5 இற்கு ஏழு மாத காலப்பகுதிக்குக் குறைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | - | உடைத்த மைசூர் பருப்பின் இறக்குமதிகள் மீதான கி.கிறாமொன்றிற்கு ரூ.5 என்ற சிறப்பு பண்டத் தீர்வை ஏழு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2014 யூன் 02 | - | பால்மா இறக்குமதி மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வைத் தளர்த்தல் கி.கிறாமொன்றிற்கு ரூ.68 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.43 இற்குக் குறைக்கப்பட்டது. இதனால் பொருத்தமான தீர்வை வீதம் கி.கிறாமொன்றிற்கு ரூ.82 ஆகக் காணப்பட்டது. |
| 2014 யூன் 11 | - | சோளம் மற்றும் இறுங்கு வகைகளின் இறக்குமதி மீதான 10 சதவீத சிறப்புப் பண்டத் தீர்வை 2014 யூலை 15 வரை நீடிக்கப்பட்டது. |
| 2014 யூலை 09 | - | அரிசி இறக்குமதி மீதான கி.கிறாமொன்றிற்கு ரூ.5 என்ற சிறப்புப் பண்டத் தீர்வை ஐந்து மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2014 யூலை 16 | - | உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.5 இற்கு மூன்று மாத காலப்பகுதிக்குக் குறைக்கப்பட்டது. |
| | - | சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.28 இற்கு மூன்று மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2014 யூலை 18 | - | 10 சதவீதம் அல்லது கி.கிறாமொன்றிற்கு ரூ.10 என்பவற்றில் எது அதிகமானதோ அந்த வீதத்தில் காணப்பட்ட மெகரல் எனும் மீன் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இற்கு ஏழு மாத காலப்பகுதிக்கு திருத்தியமைக்கப்பட்டது. |
| 2014 யூலை 26 | - | பின்வரும் உணவுப் பண்டங்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை மூன்று மாத காலத்திற்குக் குறைக்கப்பட்டது.<br>- முழுப் பட்டாணி கி.கிறாமொன்றிற்கு ரூ.22 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இற்கு<br>- உடைத்த பட்டாணி கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.18 இற்கு<br>- முழு கொண்டக் கடலை கி.கிறாமொன்றிற்கு ரூ.12 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.7 இற்கு<br>- உடைத்த கொண்டைக் கடலை கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இற்கு<br>- பாசிப்பயறு கி.கிறாமொன்றிற்கு ரூ.102 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.70 இற்கு<br>- தட்டைப் பயறு கி.கிறாமொன்றிற்கு ரூ.100 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.70 இற்கு<br>- சிவப்பு மைசூர் பருப்பு கி.கிறாமொன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.2 இற்கு<br>- மஞ்சள் மைசூர் பருப்பு கி.கிறாமொன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.2 இற்கு<br>- குரக்கன் கி.கிறாமொன்றிற்கு ரூ.100 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.70 இற்கு |
| | - | சோளம் மற்றும் இறுங்கு வகைகளின் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.10 ஆக மூன்று மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | உடைத்த சிவப்பு மைசூர் பருப்பு மற்றும் உடைத்த மஞ்சள் மைசூர் பருப்பு என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.5 ஆக மூன்று மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2014 ஓகத்து 12 | - | சின்ன வெங்காயத்தின் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.5 ஆக நான்கு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.10 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2014 ஓகத்து 15 | - | உருளைக்கிழங்கின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2014 ஓகத்து 23 | - | உருளைக்கிழங்கின் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.15 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.40 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | - | பெரிய வெங்காயத்தின் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.25 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.35 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2014 செத்தெம்பர் 05 | - | அரிசி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.1 இற்கு மூன்று மாதக் காலப்பகுதிக்குக் குறைக்கப்பட்டது. |
| | - | சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கிறாமொன்றிற்கு ரூ.28 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.33 இற்கு மூன்று மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2014 செத்தெம்பர் 06 | - | உடன் அல்லது குளிரூட்டப்பட்ட உருளைக்கிழங்கின் இறக்குமதி நீக்கப்பட்டது. |
| 2014 ஒத்தோபர் 02 | - | மீன் துண்டு மற்றும் ஏனைய மீன் தசைகளைத் தவிர உடன், குளிரூட்டப்பட்ட அல்லது உறைந்த மீனின் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. |
| 2014 ஒத்தோபர் 09 | - | பால்மா இறக்குமதிக்கு வழங்கப்பட்ட சுங்கத் தீர்வை விலக்கு அகற்றப்பட்டது. எனவே, பொருத்தமான தீர்வை வீதமானது 25 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.125 ஆக இருக்கும். |
| 2014 ஒத்தோபர் 10 | - | சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவினால் பாவிக்கப்படும் தேறல் மதுசாரத்தின் இறக்குமதி மற்றும் உள்நாட்டு வழங்கல் மீதான தீர்வையற்ற வரம்பானது ஒரு மாதத்திற்கு 20,000 லீற்றராக நிர்ணயிக்கப்பட்டது. |
| | - | தானிய வகைத் தேறல்கள், பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயத்திலிருந்தான மதுபான உற்பத்தி, உள்நாட்டில் உருவாக்கிய வெளிநாட்டு தேறல் மதுசாரம் மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட மோல்ட் மதுபானம் என்பவற்றின் மீதான உற்பத்தித் தீர்வையானது அதிகரிக்கப்பட்டது. |
| | - | இலங்கையில் நிறுவப்பட்ட ஏதாவது உரிமம் பெற்ற வடிசாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் வெளியிடப்பட்ட மோல்ட் மதுபான உற்பத்தி மீதான உற்பத்தி (சிறப்பு ஏற்பாடு) தீர்வையானது அதிகரிக்கப்பட்டது. |
| | - | சிகரெட் இறக்குமதி மீதான உற்பத்தி (சிறப்பு ஏற்பாடு) தீர்வையானது மேல் நோக்கித் திருத்தப்பட்டது. |
| 2014 ஒத்தோபர் 25 | - | பால்மா இறக்குமதியின் மீதான சுங்கத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.125 இலிருந்து கி.கி. ஒன்றிற்கு ரூ.225 இற்கு அதிகரித்ததுடன் கி.கி ஒன்றிற்கு ரூ.100 சுங்கத் தீர்வை விலக்களிக்கப்பட்டது. எனவே, ஏற்புடைத்தான தீர்வை வீதமானது கி.கி ஒன்றிற்கு ரூ.125 ஆகும். |
| | - | பட்டாணி, கொண்டைக் கடலை, பாசிப் பயறு, உழுந்து, தட்டைப் பயறு, மைசூர் பருப்பு (சிவப்பு அவரையினம்), மஞ்சள் அவரையினம், சோளம், இறுங்கு வகைகள், குரக்கன், தினை மற்றும் மாஜரீன் மீதான சிறப்பு பண்டத் தீர்வை நான்கு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| | - | சுங்கத் தீர்வை வழிகாட்டல் அத்தியாயம் 87இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீதான பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, செஸ் வரி, சுங்கத் தீர்வை மற்றும் துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி வரி என்பவற்றிற்குப் பதிலாக உற்பத்தி (சிறப்பு ஏற்பாடு) தீர்வையானது அறவிடப்பட்டது. |
| | - | மதுபான உற்பத்தி மீதான பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றிற்குப் பதிலாக உற்பத்தித் தீர்வையானது அறவிடப்பட்டது |
| | - | மதுபான இறக்குமதி மீதான பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றிற்குப் பதிலாக சுங்கத் தீர்வை மற்றும் செஸ் வரியானது அறவிடப்பட்டது. |
| | - | சிகரெட் உற்பத்தி அல்லது இறக்குமதி மீதான பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றிற்குப் பதிலாக உற்பத்தி (சிறப்பு ஏற்பாடு) தீர்வையானது அறவிடப்பட்டது. |
| | - | தானிய வகை தேறல்கள், பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயத்திலிருந்தான மதுபான உற்பத்தி, உள்நாட்டில் உருவாக்கிய வெளிநாட்டு தேறல் மதுசாரம் மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட மோல்ட் மதுபானம் என்பவற்றின் மீதான உற்பத்தித் தீர்வையானது மேல் நோக்கி திருத்தப்பட்டது. |

- இலங்கையில் பனை மரத்திலிருந்து அல்லது ஏனைய தாவரத்திலிருந்து வடித்தல் முறையைத் தவிர்ந்து ஏனைய முறையில் உற்பத்தி செய்யப்பட்ட தேறல் மதுசாரத்தின் அளவு கனவளவில் 4 சதவீதத்திலும் அதிகமாகவுள்ள மதுபானங்களின் (கள்ளு அல்லது ஏதாவது தானிய வகைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மதுபானம் தவிர்ந்த) மீதான உற்பத்தித் தீர்வையானது மேல் நோக்கித் திருத்தப்பட்டது.
- தேயிலை, இறப்பர், தெங்கு, வனிலா, வாசனைத்திரவியங்கள் மற்றும் இயற்கை மணல் மற்றும் கனிப்பொருள் உள்ளடங்கலான குறிப்பிட்ட வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதி மீதான செஸ் வரி திருத்தப்பட்டது.
- இறைச்சி, கடல் உணவுகள், பட்டர் மற்றும் கொழுப்பு, மரக்கறிகள், தேங்காய்கள், கடலைகள், பழங்கள், தேயிலை, மதுபானம் போன்றவை (வர்த்தமானி இல. 1885/46) உள்ளடங்கலாக குறிப்பிட்ட பொருட்கள் மீதான செஸ் வரி திருத்தப்பட்டது.
- கீழ்வரும் பொருட்கள் உற்பத்தி (சிறப்பு ஏற்பாடு) தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது:
  - வெளிநாட்டு அரசு மற்றும் கரைகடந்த அமைப்புக்களுடன் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மோட்டார் வாகனங்கள்/ அதன் பகுதிகளின் இறக்குமதிகள்
  - விடயம் தொடர்பான கைத்தொழில் நிறுவனத்தின் பொறுப்பான அமைச்சரினால் பரிந்துரைக்கப்பட்ட 30 சதவீதத்திற்கும் குறையாத உள்நாட்டு பெறுமதிசேர்க்கப்பட்டவையுடனான இணங்குவிப்புக் குறியீடு 84 மற்றும் 85 கீழ் வகைப்படுத்தப்படும் உள்நாட்டில் பொருத்தப்பட்ட/ உற்பத்தி செய்யப்பட்ட பகுதிகள்
  - தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் அனுமதியுடன் அரச முகவர்களினால் தொகுக்கப்பட்ட நிதியினை உபயோகித்து நிதிக் குத்தகைக்குவிடல் அல்லது நேரடிக் கொள்வனவு மூலம் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்கள்.

**2014 நவெம்பர் 03**

- தங்க இறக்குமதி மீது 4 சதவீத சுங்கத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. எனவே, பிரயோகிக்கத்தக்க தீர்வை 3.5 சதவீதமாகும்

**2014 நவெம்பர் 08**

- பால்மா இறக்குமதி மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வைத் தளர்த்தலானது கி.கி ஒன்றிற்கு ரூ.100 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.90 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே, ஏற்புடைத்தான தீர்வை வீதமானது கி.கி ஒன்றிற்கு ரூ.135 ஆகும்.
- பெற்றோல் இறக்குமதி மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வைத் தளர்த்தலானது லீற்றர் ஒன்றிற்கு ரூ.23 இலிருந்து ரூ.20 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே, ஏற்புடைத்தான தீர்வை வீதமானது லீற்றர் ஒன்றிற்கு ரூ.15 ஆகும்
- டீசல் இறக்குமதி மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வைத் தளர்த்தலானது லீற்றர் ஒன்றிற்கு ரூ.13 இலிருந்து ரூ.11 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே, ஏற்புடைத்தான தீர்வை வீதமானது லீற்றர் ஒன்றிற்கு ரூ.4 ஆகும்.

**2014 திசெம்பர் 02**

- உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.40 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.20 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது.
- பெரிய வெங்காய இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.35 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.50 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது.
- பாசிப் பயறு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.70 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.40 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது.
- சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.33 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.28 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | - | உடன் அல்லது குளிரூட்டப்பட்ட மீன், மாசிக் கருவாடு, நெத்தலிக் கருவாடு, கருவாடு, யோகட், வெண்ணெய்க்கட்டி, பால் பரவற் பொருட்கள், சின்ன வெங்காயம், உள்ளி, உடன் தோடம்பழங்கள், திராட்சைப்பழங்கள், அப்பிள், மிளகாய், கொத்தமல்லி, நற்சீரகம், பெருஞ்சீரகம், மஞ்சள், வெந்தயம், அரிசி, குரக்கன் மா, உளுத்தம் மா, நிலக்கடலை, கடுகு, மரக்கறி எண்ணெய், மாஜரீன், தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் உப்பு ஆகியவற்றின் இறக்குமதிக்குப் பிரயோகிக்கத்தக்க சிறப்புப் பண்டத் தீர்வையானது நான்கு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| 2014 திசெம்பர் 05 | - | பெற்றோல் இறக்குமதி மீதான கி.கி ஒன்றிற்கான ரூ.20 சுங்கத் தீர்வைத் தளர்த்தல் நீக்கப்பட்டது. எனவே, ஏற்புடைத்தான தீர்வை வீதமானது ஒரு லீற்றருக்கு ரூ.35 ஆகும். |
| | - | டீசல் இறக்குமதி மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வையானது லீற்றர் ஒன்றிற்கு ரூ.11 இலிருந்து ரூ.6 இற்குக் குறைக்கப்பட்டது. எனவே, ஏற்புடைத்தான தீர்வை வீதமானது ஒரு லீற்றருக்கு ரூ.9 ஆகும். |
| 2014 திசெம்பர் 13 | - | உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.20 இலிருந்து ரூ.10 இற்கு மூன்று மாத காலத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 2015 சனவரி 01 | - | பெரிய வெங்காய இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.50 இலிருந்து ரூ.10 இற்கு நான்கு மாத காலத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 2015 சனவரி 22 | - | அரிசி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.1 இலிருந்து ரூ.20 இற்கு நான்கு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2015 சனவரி 30 | - | 1,000 சி.சி க்குக்குறைவான உந்து ஊர்திகளின் மீதான உற்பத்தி (சிறப்பு ஏற்பாடு) தீர்வையானது கீழ் நோக்கி திருத்தப்பட்டதுடன் கலப்பு உந்து ஊர்திகள் மீதான உற்பத்தித் தீர்வையானது மேல் நோக்கித் திருத்தப்பட்டது. |
| | - | போற்லான்ட் சிமெந்து மற்றும் ஓரளவு நிறைவுசெய்யப்பட்ட இரும்பு உற்பத்திகள் அல்லது கலப்பல்லா உருக்கு என்பவற்றின் இறக்குமதி சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| | - | பின்வரும் உணவு வகைகளின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது ஆறு மாத காலத்திற்குக் குறைக்கப்பட்டது:<br>- மாசிக் கருவாடு கி.கி ஒன்றிற்கு ரூ.302 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.102 இற்கு<br>- நெத்தலிக் கருவாடு கி.கி ஒன்றிற்கு ரூ.26 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.11 இற்கு<br>- பாசிப் பயறு கி.கி ஒன்றிற்கு ரூ.40 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.10 இற்கு<br>- உழுந்து கி.கி ஒன்றிற்கு ரூ.110 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.60 இற்கு<br>- மிளகாய் (தூளாக்கப்பட்டது அல்லது அரைக்கப்பட்டது) கி.கி ஒன்றிற்கு ரூ.150 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.125 இற்கு<br>- கொத்தமல்லி கி.கி ஒன்றிற்கு ரூ.46 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.26 இற்கு<br>- கொத்தமல்லி (தூளாக்கப்பட்டது அல்லது அரைக்கப்பட்டது) கி.கி ஒன்றிற்கு ரூ.202 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.52 இற்கு<br>- மஞ்சள் (தூளாக்கப்படாத அல்லது அரைக்கப்படாதவை) கி.கி ஒன்றிற்கு ரூ.202 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.102 இற்கு<br>- மஞ்சள் (ஏனையவை) கி.கி ஒன்றிற்கு ரூ.510 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.360 இற்கு<br>- உழுத்தமா கி.கி ஒன்றிற்கு ரூ.300 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.200 இற்கு<br>- தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் கி.கி ஒன்றிற்கு ரூ.102 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.50 இற்கு<br>- சீனி கி.கி ஒன்றிற்கு ரூ.28 இலிருந்து கி.கி ஒன்றிக்கு ரூ.18 இற்கு |

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்**

2014 மாச்சு 17 - இலங்கைக்கு வெளியே இலங்கை அரசாங்கத்தினால் 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட பன்னாட்டு அரச முறிகளை இரண்டாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்ய, வைத்திருக்க மற்றும் மாற்றுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

2014 மே 28 - போக்குவரத்து நோக்கத்திற்காக வெளிநாட்டுச் செலாவணியைப் பெறத்தகுதியுடைய நபர்களுக்கு வெளிநாட்டுப் பயண அட்டையை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

- விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கின் மீது விதிக்கப்பட்ட குறைந்தபட்ச நிலுவைத் தேவைப்பாடு நீக்கப்பட்டது.

- வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்களின் கணக்கு வைப்பாளர்கள் வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்கள் கணக்கின் தற்போதுள்ள நிதியத்திலிருந்து வெளிநாட்டு ஒப்பந்தத்திற்கான கொடுப்பனவினை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டனர்.

- பண்டங்களின் இறக்குமதியாளருக்கு அத்தகைய பொருட்களின் வழங்குநர்களினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான வட்டிக் கொடுப்பனவு தொடர்பில் வெளியக பணவனுப்பல்களை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

- செலாவணி கண்காணிப்பாளரை அணுகாமல் நாணயக் கடிதத்தினை வழங்குவதற்கும் செல்லுபடியாகும் காலத்தினை நீடிப்பதற்கும் மற்றும் நாணயத்தின் கடிதத்தின் வாசகங்களைத் திருத்தியமைப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதியளிக்கப்பட்டனர்.

- வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பட்டியலிடப்படாத திறைசேரி முறிகளில் பிணையங்கள் முதலீட்டு கணக்கினூடாக முதலீடு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

- இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை பெற்றுக்கொள்வதற்கான தகைமை அநேகமான வெளிநாட்டு நாணயக் கணக்கு வைப்பாளர்களுக்கு விரிவாக்கப்பட்டது (புலம்பெயர்ந்தோர் தடுக்கப்பட்ட கணக்கு, பிணையங்கள் முதலீட்டு கணக்கு மற்றும் இராஜாங்க கணக்கு போன்றன).

- இலங்கையில் வதியும் மாணவர், மாணவர் நுழைவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கு வெளிநாட்டு அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடு தொடர்பாக வெளியக பணவனுப்பல்களை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

- இலங்கையில் வதியும் ஒருவர் கற்றல் செயற்பாட்டிற்கு இலங்கைக்கு வெளியில் செல்ல எண்ணியிருப்பின், அவருக்கு இலங்கைக்கு வெளியிலுள்ள வங்கிகளில் கணக்குகளைத் திறப்பதற்கு, பேணுவதற்கு மற்றும் தொழிற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

2014 செத்தெம்பர் 29 - வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினை வைத்திருப்பவரின் கடந்த மற்றும் எதிர்கால நியாயமான காலம் முழுவதும் வெளிநாட்டுச் செலாவணிப் பணப் பாய்ச்சலிலிருந்து கடன்களை ஈடுசெய்யும் இயலுமையை மதிப்பிட்டு, வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கினை வைத்திருப்பவர்களுக்கு எந்த நோக்கத்திற்கும் வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

2014 ஒத்தோபர் 27 - வெளிநாட்டு நாணயக் கணக்கினை சீன றென்மின்பியில் திறப்பதற்கும் பேணுவதற்கும் முடியுமென அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது.

2014 திசெம்பர் 31 - இலங்கையில் வதியும் ஒருவர் வெளிநாட்டிற்குப் பயணிக்கும் பொழுது வழங்கப்படும் பயணப்படியின் ஒரு பகுதியாக ஐ.அ.டொலர் 10,000 வரை அல்லது அதற்குச் சமனான மாற்றக்கூடிய ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

- சரக்கு அனுப்பும் பணியை மேற்கொள்ளும் இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதியும் நபர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளும் தேவைப்பாடுகளும் அகற்றப்பட்டன.

**இறைத் துறை**

**அரச அரசிறை**

2014 சனவரி 01

- தொலைத்தொடர்பூட்டல் கைத்தொழிலில் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த கருவிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற செம்புக் கம்பிகளின் இறக்குமதி அல்லது உள்நாட்டுக் கொள்வனவு என்பன பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- பெரிய பவுசர்கள், வீதி உழவு இயந்திரத்திற்கான பகுதியளவான அரைப்பெட்டி ஏதேனும் உள்ளூராட்சி சபைகளினால் குப்பை அகற்றல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற ஏதேனும் பொறிகள் அல்லது இயந்திரங்கள் என்பனவற்றிற்குப் பொருந்தக்கூடிய தற்போதைய பெறுமதிசேர் வரியிலிருந்தான விலக்களிப்புக்கள் உள்நாட்டு தயாரிப்பாளர்களிடமிருந்து அத்தகைய பொருட்களைக் கொள்வனவு செய்வதனையும் உள்ளடக்கி விரிவாக்கப்பட்டன.
- கழுத்துப்பட்டி மற்றும் அதன் அணி முடிச்சு, வடிவமைப்புப் பேனாக்கள், உறைந்த தூண்டிலுக்கிடப்படும் இரை, மீன் தூண்டில்/தண்டு/சுழல் கருவி, மீன்பிடி இழுவைக் கருவி, கடல் உந்துவிவை இயந்திரங்கள் என்பவற்றின் இறக்குமதி அல்லது அவற்றின் வழங்கல் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- பின்வரும் பொருட்களின் இறக்குமதி அல்லது வழங்கல் தொடர்பில் வழங்கப்பட்ட பெறுமதிசேர் வரியிலிருந்தான விலக்களிப்பு நீக்கப்பட்டதுடன் இவை 12 சதவீத பெறுமதிசேர் வரிக்கு உள்ளாக்கப்பட்டன:
  - நெல், அரிசி, கோதுமை, ஏலக்காய், கறுவா, கராம்பு, சாதிக்காய், சாதிபத்ரி, மிளகு, தேங்காய் துருவல், இறப்பர், இறப்பர் பால், உடன் தேங்காய்கள், பச்சை இலை உள்ளடங்கலான தேயிலை, அரிசி மா, கோதுமை மா, பாண், முட்டை, திரவப்பால் அல்லது பால்மா
  - வேளாண்மை உழவுஇயந்திரம் அல்லது வீதி உழவியந்திரத்திற்கான இழுபொறிகள்
  - தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் சாதனம்
  - தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்கான இயந்திரம்
  - வரி விடுமுறையொன்றிற்காக தகுதிவாய்ந்த முயற்சியொன்றுக்காக எடுக்கப்படுகின்ற பொறி மற்றும் இயந்திரம்
  - மருந்தாக்கல் தயாரிப்புக்கள்
- மொத்த விற்பனை அல்லது சில்லறை வர்த்தகத்தின் மீதான பெறுமதிசேர் வரிக்கு ஏற்புடைத்தான காலாண்டு புரள்வானது ரூ.500 மில்லியனிலிருந்து ரூ.250 மில்லியனிற்கு குறைக்கப்பட்டது.
- பெறுமதிசேர் வரிக்குட்பட்ட பொருட்களை வழங்குகின்றதும் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிப்புப் பெற்ற பொருட்களை வழங்குகின்றதுமான மொத்த அல்லது சில்லறை வியாபாரங்களைப் பொறுத்தவரை பொருட்களின் வழங்கலுக்குப் பொருத்தமான விலக்களிப்பானது மொத்த வழங்கலின் ஆகக் கூடியது 25 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.
- இலங்கையில் மீளமைக்கப்பட்டுள்ள பன்னாட்டு வலையமைப்பினுள் உள்ள நிறுவனங்களின் ஏதேனும் தலைமை அலுவலகங்கள் அல்லது பிராந்திய அலுவலகங்களினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயங்களின் பெறுகைகள் பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.
- பெறுமதிசேர் வரி நோக்கத்திற்கான “பன்னாட்டு போக்குவரத்து” இற்கான வரைவிலக்கணம் விரிவாக்கப்பட்டதுடன் இது இலங்கைக்குள் அமைந்துள்ள பன்னாட்டு வானூர்திநிலையங்களுக்கு இடையிலான பண்டங்கள் அல்லது பயணிகளின் போக்குவரத்துடன் நேரடியாக தொடர்புடைய பணிகளையும் உள்ளடக்குகின்றது.
- பின்வரும் விடயங்கள் தேசத்தை கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன:
  - தீர்வையற்ற கடைத்தொகுதியில் மேற்கொள்ளப்படும் பொருட்களின் சில்லறை வர்த்தகம்

- தயாரிப்பாளர்களால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் விற்பனைக்கு மூன்று ஆண்டு காலத்திற்கு
- திரவப் பெற்றோலிய வாயுவின் விநியோகம்
- வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுக்காக ஏதேனும் வானூர்திநிலையங்களில் வழங்கப்படும் பணிகள்

- சிறப்புப் பண்டத் தீர்வைக்குட்பட்ட பொருட்கள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான விலக்களிப்புக்களின் பிரயோகம் சுங்கத்தில் மட்டும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் செலுத்துகைக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இதன்படி, அத்தகைய பொருட்களின் உள்நாட்டு வழங்கல் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியைச் செலுத்துவதற்கு பொறுப்புடையதாகும்.
- முதலீட்டு நிதியக் கணக்கில் நிதியங்களை வைப்பிடும் தேவைப்பாடு விலக்கிக் கொள்ளப்பட்டதையடுத்து, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து நிதியியல் பணிகளுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்பு நிறுத்தப்பட்டது.
- உழவு இயந்திரத்தின் விற்பனையிலிருந்தான புரள்வு மீதான தேசத்தை கட்டியெழுப்பும் வரியின் விலக்களிப்பானது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உழவு இயந்திரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.
- மருந்தாக்கல் தயாரிப்புக்கள் இறக்குமதி இடங்களில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி செலுத்துவதற்கு பொறுப்புடையனவாகும்
- தொலைத்தொடர்பூட்டல் தீர்வை 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. எனினும், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபார முயற்சிகளை வெளிமூலங்களிலிருந்து பெறும் துறைகளை வசதிப்படுத்துவதற்காக இணையம்/ அகலப்பட்டை என்பவற்றினூடாக வழங்கப்படும் பணிகள் மீது பொருந்தத்தக்க 10 சதவீத சலுகை வீதம் மாற்றமின்றியிருக்கும்.
- தகவல் தொழில்நுட்ப துணை அச்சுப்பொறிகள், ஒளியியல் கருவி கம்பிகள், சூரியகதிர் கட்டுப்பாட்டு சுருள்கள், சந்தை அபிவிருத்திக்கான தர நாமத்தினைக் கொண்ட பொருட்கள், பொறி மற்றும் கனரக தொழில்துறை, ஆயுள்வேத கைத்தொழில், மீன்பிடி கைத்தொழில், தின்பண்டக் கைத்தொழில், தங்கம் மற்றும் மோட்டார் வாகன இறக்குமதிகள் மற்றும் உள்நாட்டு பெறுமதி சேர்ப்பிற்கான ஏனைய கைத்தொழில்கள் என்பவற்றின் மீதான இறக்குமதி தீர்வை திருத்தப்பட்டது.

2014 சனவரி 21

- மருந்துகளை பொதியிடுவதற்காக 0.30 மி.மீற்றரிற்கு மேற்படாத தடிப்பைக் கொண்ட சுருள் இறக்குமதி மீதான செஸ் தீர்வையானது நீக்கப்பட்டது
- சுகாதார துவாய்கள் மற்றும் அடைப்புப் பஞ்சுருண்டை என்பவற்றின் இறக்குமதி மீதான செஸ் தீர்வையானது 30 வீதத்திற்கு அல்லது கிலோ கிராமிற்கு ரூ.350 ஆக விதிக்கப்பட்டது.
- ஈரமான தூய்மையாக்கல் துணியின் இறக்குமதி மீதான செஸ் தீர்வையானது 30 வீதத்திற்கு அல்லது கிலோ கிராமிற்கு ரூ.350 என அதிகரிக்கப்பட்டது.

2014 ஏப்பிறல் 01

- பின்வரும் நிறுவனங்களின் (பங்கு இலாபங்கள் மற்றும் வட்டியிலிருந்தான வருமானம் தவிர்ந்த) இலாபங்களும் வருமானங்களும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன:
  - 2006ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை
  - 1980ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம்.
  - 1986ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இலங்கை பௌதீக நிறுவன (கூட்டுத்தாபன) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை பௌதீக நிறுவனம்.
  - நம்பிக்கை கட்டளைச் சட்டத்தின் பகுதி 114இற்கு கீழ் கூட்டிணைக்கப்பட்ட லயனல் வென்ட் ஞாபகார்த்த நிதியம்

- பின்வருவனவற்றிலிருந்து உழைக்கப்பட்ட இலாபம் மற்றும் வருமானங்களுக்கு பின்வரும் சலுகை வருமான வரி வீதங்கள் வழங்கப்பட்டன:
  - ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு குறிப்பிட்ட சில பணிகளை வழங்குவதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடைத்தான 12 சதவீதமான தற்போதைய சலுகை வரி வீதமானது பண்டங்கள் அல்லது பணிகளின் ஏற்றுமதியாளர்களுக்கு அல்லது நேரடியாக வெளிநாட்டுத் தாய் கம்பனிகளுக்கு வழங்கப்படும் பணிகளையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது.
  - தொழில்சார் நிபுணர்களின் ரூ.35 மில்லியனுக்கு மேலான தொழிலிருந்தான வருமானத்திற்கு பிரயோகிக்கக்கூடிய வருமான வரியின் உச்ச வீதமானது 16 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.
  - தொழில்சார்நிபுணர்களின் குடியிருப்பு கட்டிடங்களை கட்டுவதற்காக வங்கிகளால் வழங்கப்படுகின்ற கடன் வசதிகளின் வட்டியான ஏற்புடைத்தான வீதத்தின் 1/2 இற்கு மட்டுமே வரியிடப்படுகின்றது.
  - பன்னாட்டுப் பணிகளை வழங்குவதற்காக பன்னாட்டு நிறுவனங்களை தாபித்துள்ள தொழில்சார்நிபுணர்கள் 5 ஆண்டு காலப்பகுதிக்கு ஏற்புடைத்தான கம்பனி வருமான வரியின் 1/2 இற்கு வரியிடப்பட்டனர்.
  - கப்பல் தொழிற்படுத்துநர் அல்லது கப்பல் கைத்தொழிலில் பயிலுநர்களுக்கு திறன் அபிவிருத்திக்கான பணிகளை வழங்குகின்ற ஏதேனும் வெளிநாட்டு கப்பல் முகவருக்கு 10 சதவீத வருமான வரிக் கழிப்பனவு அனுமதிக்கப்பட்டது.
- தகுதிவாய்ந்த ஏற்றுமதிகளின் இலாபத்தின் மீதான 10 சதவீத ஏற்புடைத்தான வீதம் 12 சதவீதமாக திருத்தப்பட்டது.
- ரூ.500 மில்லியனை விஞ்சாத ஆண்டுப் புரள்வைக் கொண்ட தொழில்முயற்சிகளுக்கான 10 சதவீதம் 12 சதவீதமாகத் திருத்தப்பட்டது.
- வரி விடுமுறை மற்றும் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளின் பிரயோகத்தின் மீது பின்வரும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன:
  - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள எந்தவொரு கம்பனிக்குமான வருமான வரியிலிருந்தான விலக்களிப்பு 2014 ஏப்பிறல் 01 இற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.
  - தகுதியான கொடுப்பனவாக ஏற்கனவேயிருக்கும் நிறுவனத்தின் விரிவாக்கத்திற்கான முதலீடுகளின் குறைப்பு 2014 ஏப்பிறல் 01 இற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய முதலீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.
  - "நிறைவேற்று அலுவலர்" ஒருவரின் வரைவிலக்கணத்தின் நோக்கத்திற்காக மாதாந்த ஊதியமானது ரூ.20,000 இலிருந்து ரூ.75,000 இற்கு திருத்தப்பட்டது.
- வருமான வரி நோக்கத்திற்காக பின்வரும் கழிப்பனவுகள் மற்றும் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன:
  - பன்னாட்டுத் தலைமையகங்கள் அல்லது பிராந்திய தலைமை அலுவலகங்கள் என்பவற்றின் கூட்டிணைப்புடன் தொடர்புடைய சிறப்புச் செலவினங்கள்.
  - தொழில்சார்நிபுணர்களுக்கு வதிவிடத் தொடர் மாடிகளைக் கட்டுதல் தொடர்பான மூலதன மீள்கொடுப்பனவுகள் மீது மாதமொன்றிற்கு ரூ.50,000இற்கு விஞ்சாத பெறுமதி தொடர்பில் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகள்.
  - நன்கு கட்டியெழுப்பப்பட்ட பன்னாட்டு வர்த்தகத் தர நாமங்களுடனான பன்னாட்டு அறிவார்ந்த உடைமைகளை கையேற்பதற்கான மொத்தச் செலவு.
  - இலங்கை மத்திய வங்கியால் குறிப்பிடப்பட்டதன்படி கணிப்பிடப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் கையேற்பு அல்லது இணைப்புத் தொடர்பிலான செலவு.

| | | |
|---|---|---|
| 2014 ஏப்பிறல் 24 | - | முடிவுறுத்தலை நடைமுறைப்படுத்த முன்பு அல்லது ஏதேனும் மாற்றங்கள் குறிப்பாக ஒருங்கிணைப்பு, இணைப்பு, மீள்கட்டமைப்பு போன்றவற்றிற்கு முன்பு கம்பனியால் வரித் தடை நீக்கச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. |
| 2014 மே 26 | - | எந்தவொரு கம்பனியினதும் எந்தவொரு எண்ணிக்கையிலான பங்குகளின் வழங்கல், மாற்றல் அல்லது ஒப்படைப்பு என்பவற்றின் விளைவாக ஏதேனும் பங்குச் சான்றிதழ் மீதான முத்திரைத் தீர்வைப் பிரமாணங்கள் திருத்தப்பட்டன. |
| 2015 சனவரி 01 | - | பெறுமதிசேர் வரியின் வீதமானது 12 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. |
| | - | குறிப்பிட்ட துறைமுகத்தில் பிரத்தியேகமாகப் பயன்படுத்துவதற்கென இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இறக்குமதி செய்யப்படும் இயந்திரம், உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பனவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - | பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பனவற்றிலிருந்தான விலக்களிப்பின் மாதிரிப் பெறுமதி வரையறையானது ரூ.25,000 இலிருந்து ரூ.50,000 இற்கு விரிவாக்கப்பட்டது. |
| | - | மொத்த விற்பனை அல்லது சில்லறை வர்த்தகத்தின் மீதான பெறுமதிசேர் வரிக்கு ஏற்புடைத்தான காலாண்டு புரள்வானது ரூ.250 மில்லியனிலிருந்து ரூ.100 மில்லியனுக்குக் குறைக்கப்பட்டது. |
| | - | பெறுமதிசேர் வரியின் நோக்கங்களுக்காக பதிவு செய்வதற்கான கடப்பாட்டு வழங்கல்களின் உச்சளவானது ஆண்டொன்றிற்கு ரூ.12 மில்லியனிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.15 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் கடப்பாட்டுப் புரள்வின் உச்சளவானது காலாண்டொன்றிற்கு ரூ.3 மில்லியனிலிருந்து காலாண்டொன்றிற்கு ரூ.3.75 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | மொத்தச் சேகரிப்பிற்கான பந்தயம் மற்றும் சூதாட்ட தீர்வையானது 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | கசினோ களியாட்ட செயற்பாடுகளில் நுழையும் ஒவ்வொரு நபரின் மீதும் ஐ.அ.டொலர் 100 ஆன அனுமதிக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| **அடுத்து வருபவை** | - | பின்வரும் நபர்களின்/ நிறுவனங்களின் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன:<br>- வெளிநாட்டு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டிருக்கும் ஐ.அ.டொலர் வைப்புக்கள் அல்லது ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்களில் 2015 சனவரி 01 இல் அல்லது அதற்குப் பின் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்தான கூறுநம்பிக்கைகள்.<br>- எந்தவொரு தகவல் தொழில்நுட்ப/ வெளியிலிருந்து வியாபார முயற்சிகளை பெற்றுக்கொள்ளும் கம்பனி ஆரம்பித்து 2 ஆண்டு காலப்பகுதிக்குள் அத்தகைய கம்பனியின் சிறப்புத் தேவைப்பாடாக வேத்துரிமை மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுப்பனவுகளிலிருந்தும் கம்பனி, பங்குடமை அல்லது இலங்கைக்கு வெளியிலிருக்கும் அமைப்புக்கள்<br>- நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட கம்பனிப் படுகடன் பிணையத்தில் 2015 சனவரி 01 இல் அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட முதலீடுகள் |
| | - | சலுகை வருமான வரி வீதங்கள் பின்வருமாறு அறிமுகப்படுத்தப்படவுள்ளன:<br>- 1970 களில் உற்பத்தித் தொழிலை ஆரம்பித்த உள்ளூர் உற்பத்தியாளரினால் செலுத்தப்படும் வருமான வரியில் 10 சதவீதக் கழிப்பனவு.<br>- உள்ளூர் சீனி கைத்தொழிலுக்கு 12 சதவீதம் பிரயோகிக்கப்படும்.<br>- சலுகை வீதம் 12 சதவீதத்திற்கு தகுதிபெறும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் ஆண்டுக்கான புரள்வு வரையறை ரூ.500 மில்லியனிலிருந்து ரூ.750 மில்லியனுக்கு அதிகரிக்கப்படும். |

- பன்னாட்டு பட/நாடக விழாவில் விருது வென்ற சினிமா அல்லது ஒரு நாடகத்தினை உருவாக்கும் தனிநபரின் படங்களிலிருந்தான அல்லது நாடகங்களிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானங்களின் அரைப்பங்கிற்கு அவ்விருது பெற்ற ஆண்டிலிருந்து 5 ஆண்டிற்கு விலக்களிக்கப்படும்.

- குறிப்பிட்ட சில தொழில் வகைகளுக்குப் பொருத்தமான 16 சதவீதமானது ஏனைய தொழில் வகைகளையும் உள்ளடக்குவதற்கு விரிவாக்கப்படும்.

- ஐ.அ.டொலர் 2 மில்லியனைவிடக் குறையாததும் ஏற்றுமதிக்காக பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபடுவதுமான புதிய தொழில்முயற்சிகளுக்கு ஒடுங்குபாகு மீதி முறையிலான தேய்மானப்படி வழங்கப்படுவதுடன் அவ்வாறான இலாபங்களிலிருந்து வழங்கப்படும் பங்கிலாபங்களுக்கு 5 ஆண்டுகளுக்கு விலக்களிக்கப்படும்.

- மேற்கு மாகாணத்திற்கு வெளியில் மதுபானம் அல்லது புகையிலை போன்ற பொருட்கள் தவிர்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் வியாபாரத்தினை மேற்கொள்ளும் ஏற்கனவேயிருக்கும் தொழில்முயற்சியின் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் மீது பிரயோகிக்கக்கூடிய வரி வீதமானது சில நிபந்தனைகளிற்குட்பட்டு ரூ.500 மில்லியனை விஞ்சாதவிடத்து 5 ஆண்டு காலத்திற்கு 50 சதவீதத்தினால் குறைக்கப்படும்.

- ஏதேனும் உற்பத்தி வியாபாரத்தில், ரூ.500 மில்லியனுக்கு விஞ்சிய முதலீட்டுக் கடப்பாட்டுடன் 2015 திசெம்பர் 31இல் அல்லது அதற்கு முன்பு வரி நோக்கத்திற்காக உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்துடன் பதிவு செய்யப்பட்ட ஏதாவது கம்பனி 7 ஆண்டு காலத்திற்குப் பொருத்தமான வரி வீதத்தில் 50 சதவீதக் குறைப்பிற்கு தகுதியுடையதாகும்.

- வட்டித் தொகையினைக் கருத்திற் கொள்ளாது 2.5 சதவீதமொரு ஒற்றை பிடித்துவைத்தல் வரி வீதமானது அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

- மூத்த பிரஜைகளின் வட்டி வருமானமானது பிடித்துவைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

- நியம திறன் அபிவிருத்திப் பயிற்சி வழங்கும் போது பயிலுனர்களுக்கு ஏற்படும் செலவினம் மீது மூன்றாந்தர தொழில்சார் கல்வி ஆணைக்குழுவுடன் பதிவு செய்யப்படட எந்தவொரு நபருக்கும் மும்மடங்கு கழிவு வழங்கப்படும்

- தொழில் வருமானத்திலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி மீதான விலக்களிக்கப்பட்ட தொகையானது ரூ.600,000 இலிருந்து ரூ.750,000 இற்கு அதிகரிக்கப்படும்.

- அனைத்து கசினோ தொழிற்பாட்டாளர்கள் மீது ஒரே தடவையில் சிறப்புத் தீர்வையாக ரூ.1,000 மில்லியன் விதிக்கப்படும்.

- பந்தயம் மற்றும் சூதாட்ட தீர்வை சட்டத்தின் கீழ் செலுத்தக்கூடிய ஆண்டுத் தீர்வையானது இரட்டிக்கப்படும்.

- தவறணை அல்லது மதுபான விற்பனை நிலையங்கள் ஒவ்வொன்றின் மீது ஒரே தடவையில் செலுத்தப்படும் விசேட தீர்வையாக ரூ.250,000 விதிக்கப்படும்.

- இலங்கையிலுள்ள அனைத்து உரிமமளிக்கப்பட்ட செல்லிடத் தொலைபேசி தொழிற்பாட்டாளர்களுக்கும் ஒரேயொரு தடவை தீர்வையாக ரூ.250 மில்லியன் விதிக்கப்படும்.

- இலங்கை செயற்கைக் கோளிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தினைப் பயன்படுத்தும் செயற்கைக் கோள் உரிமையாளர்கள் மீது ஒரே தடவையில் செலுத்தப்படும் விசேட தீர்வையாக ரூ.1,000 மில்லியன் விதிக்கப்படும்.

- 5 இற்கு மேற்பட்ட அலைபரப்பும் இடங்களைப் பயன்படுத்தி தீவு முழுவதும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் பிரத்தியேக விளையாட்டு அலைவரிசைகள் மீது ரூ.1,000 மில்லியன் தீர்வை அறவிடப்படும்.

- நுகர்வோரிடமிருந்து மீள்நிரம்பலின் போது அறவிடப்படும் 25 சதவீத வரியானது செல்லிட வசதி தொழிற்பாட்டாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ரூ.150 மில்லியன் அல்லது அதற்கு கூடிய பெறுமதியினையுடைய அனைத்து வீடுகள் அல்லது 10,000 சதுர அடியினைவிடக் கூடிய வீடுகள், இதில் ஆண்டினடிப்படையில் எது அதிகமானதோ அப்பெறுமதிக்கு அவ்வீட்டின் உரிமையாளருக்கு ஆண்டிற்கு ரூ.1 மில்லியன் பெறுமதியிலான மாளிகை வரி விதிக்கப்படுகின்றது.
- புலம்பெயர்வோரினால் புலம்பெயரும் வேளையில் நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்லப்படுவதற்கு விடுவிக்கப்படும் அனைத்து வெளிநாட்டுச் செலாவணியின் மீதும் 20 சதவீத வரி விதிக்கப்படுகிறது.
- வரி ஆண்டு 2013/2014 இல் தனிநபர்/ கம்பனிகளின் ரூ.2,000 மில்லியனைவிட அதிகமான இலாபங்களின் மீது ஒரேயொரு தடவை மிகை வருமான வரி 25 சதவீதம் விதிக்கப்படுகின்றது.

**அரச செலவினம்**

2014 சனவரி 01 - அரச அலுவலர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி மாதமொன்றிற்கு ரூ.1,200 இலிருந்து ரூ.7,800 இற்கு அதிகரிக்கப்பட்டது.

- 2006ஆம் ஆண்டிற்கு முன்னர் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படி மாதமொன்றிற்கு ரூ.500 இலிருந்து ரூ.3,675 இற்கு அதிகரிக்கப்பட்டதுடன் 2006ஆம் ஆண்டிற்கு பின்னர் ஓய்வுபெற்ற ஓய்வூதியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி மாதமொன்றிற்கு ரூ.350 இலிருந்து ரூ.3,525 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2014 நவெம்பர் 01 - அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்களுக்கு முறையே மாதமொன்றிற்கு ரூ.3,000 மற்றும் மாதமொன்றிற்கு ரூ.2,500 ஆன இடைக்காலப் படி வழங்கப்பட்டது.

2015 சனவரி 01 - அரச ஊழியர்களுக்கான வாழ்க்கை செலவுப்படி மாதமொன்றிற்கு ரூ.10,000 இற்கு மாதமொன்றிற்கு ரூ.2,200 இனால் அதிகரிக்கப்பட்டது.

2015 பெப்புருவரி 01 - அரச துறை ஊழியர்களுக்கான சம்பளம் ரூ.7,000 இனால் அதிகரிக்கப்பட்டது. ரூ.5,000 ஆனது பெப்புருவரியில் வழங்கப்பட்டதுடன் மிகுதி யூனில் வழங்கப்படும்.

**நாணயத் துறை**

2014 சனவரி 02 - தற்போதுள்ள கொள்கை வீத வீச்சிற்குப் பதிலாக துணைநில் வீத வீச்சு உருவாக்கப்பட்டது.

  - தற்போதுள்ள துணைநில் மீள்கொள்வனவு வசதியானது துணைநில் வைப்பு வசதி எனப் பெயர் மாற்றப்பட்டதுடன், இலங்கை மத்திய வங்கியுடனான வங்கித்தொழில் முறைமையின் ஒரு நாளுக்குள்ளேயான மிகையான நிதியத்தின் வைப்புக்களுக்கான வீதமாக துணைநில் வைப்பு வசதி வீதமாகவிருக்கும்.
  - தற்போதுள்ள துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியானது துணைநில் கடன் வழங்கல் வசதி எனப் பெயர் மாற்றப்பட்டதுடன், இலங்கை மத்திய வங்கியால் வங்கித்தொழில் முறைமையின் ஒரு நாளுக்குள்ளேயான கடன் வழங்கலுக்கான வீதமாக துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் இருக்கும்.
  - துணைநில் வைப்பு வசதி வீதமானது 50 அடிப்படைப் புள்ளிகளினால் 8.0 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன், இதன் மூலம் துணைநில் வீத வீச்சானது தற்போதுள்ள 200 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 150 அடிப்படைப் புள்ளிகளுக்குக் குறைக்கப்பட்டது.

- மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளுக்காக வர்த்தக வங்கிகளில் திறக்கப்படும் நாணயக் கடிதங்களுக்கெதிரான 100 சதவீதமான குறைந்தபட்ச காசு அளவுத்தேவைப்பாடு நீக்கப்பட்டது.

2014 பெப்புருவரி 01 - ரூபா கொடுக்கல்வாங்கல்களில் மத்திய வங்கியின் பூச்சியக் கொடுகடன் இடர்நேர்வைக் கருத்திற்கொண்டு, துணைநில் வைப்பு வசதியின் கீழ் திறந்த சந்தை நடவடிக்கைகளில் பங்கேற்பாளர்களுக்கு மத்திய வங்கியினால் பிணை வழங்கப்பட வேண்டிய தேவைப்பாடு இடைநிறுத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2014 செத்தெம்பர் 23 | - | ஒரு குறிப்பிட்ட திறந்த சந்தை நடவடிக்கைகளில் பங்கேற்கும் நிறுவனத்திற்கான துணைநில் வைப்பு வசதிகளின் கிடைப்பனவு தற்போதுள்ள துணைநில் வைப்பு வசதி வீதமான ஆண்டொன்றுக்கு 6.5 சதவீதத்தில் ஒரு கலண்டர் மாதத்திற்கு ஆகக்கூடியது 3 தடவைகள் என மட்டுப்படுத்தப்படுவதுடன் மூன்று தடவைகளுக்கு மேலான எந்த வைப்பும் ஆண்டொன்றுக்கு 5.00 சதவீதம் என்ற குறைந்த வீதத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். செத்தெம்பர் மாதத்தில் 6.50 சதவீதத்தில் துணைநில் வைப்பு வீதத்தின் கிடைப்பனவு இரண்டு தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. |
| 2015 மாச்சு 02 | - | 5 சதவீத சிறப்பு துணைநில் வைப்பு வசதி வீதம் புறக்கீடு செய்யப்பட்டது. துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பன முறையே 6.50 சதவீதமாகவும் 8 சதவீதமாகவும் தொடர்ந்தும் காணப்பட்டது. |

**நிதியியல் துறை**

**உரிமம் பெற்ற வங்கிகள்**

| | | |
|---|---|---|
| 2014 பெப்புருவரி 17 | - | நியதி திரவத்தன்மை சொத்து விகிதத்தை அடையும் நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியுடனான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் துணைநில் வைப்பு வசதி மீதிகள் திரவத்தன்மையான சொத்துக்கள் என தீர்மானிக்கப்பட்டன. |
| 2014 பெப்புருவரி 25 | - | பணத்தைப் மீளப்பெறுவதற்காக வேறு வங்கியின் தன்னியக்க அட்டை பொறியினை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களிடமிருந்து அட்டை வழங்குநர்களால் விதிக்கப்படும் கட்டணங்களின் உச்ச எல்லை மீளப்பெறல் ஒன்றிற்கு ரூ.15இலிருந்து ரூ.30இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | அட்டை வழங்குநரின் வாடிக்கையாளரினால் எடுப்பனவு செய்யப்பட்ட நிதிக்காக அட்டை வழங்குநரிடமிருந்து நிதி ஏற்பாட்டாளரினால் விதிக்கப்படத்தக்க பரஸ்பர மாற்றல் கட்டணத்தின் உச்ச எல்லை மீளப்பெறல் ஒன்றிற்கு ரூ.20 இலிருந்து ரூ.35 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2014 மாச்சு 31 | - | பாசல் II இன் மூலதன போதுமை கட்டமைப்புத் தேவைப்பாட்டின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்விற்கான மூலதன விதிப்பை கணிப்பிடுவதற்கான நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை மீதான வழிகாட்டல்கள் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன. |
| 2014 ஏப்பிறல் 24 | - | இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதியில் மேற்கொள்ளப்படுகின்ற வைப்புக்கள் மீது செலுத்தப்படும் வட்டி மீதான பிடித்துவைத்தல் வரியின் குறைப்பானது முடிவுறுத்தப்பட்டது. |
| 2014 யூன் 05 | - | அசையாச் சொத்துக்களின் மதிப்பீடுகளுக்கான மதிப்பீட்டாளர்களின் பொருத்தப்பாடுகைப் பிரமாணங்கள் உள்ளடங்கலான ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. |
| 2014 யூன் 17 | - | நகை அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2014 யூன் 26 | - | அதிகபட்சக் கடன் வசதிகள் தொடர்பான பணிப்புரைகள் திருத்தப்பட்டன. |
| | - | 2015 யூலை 01 இலிருந்து தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பில் அடிப்படை பாதுகாப்பு நியமங்களினை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன. |
| 2014 யூலை 1 | - | வர்த்தக வங்கிகளின் தேறிய திறந்த நிலமைகள் ஐ.அ.டொலர் 120 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 189 மில்லியனிற்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டது. |
| 2014 செத்தெம்பர் 01 | - | பொது இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் நடவடிக்கைகளினைச் சீராக மேற்கொள்வதற்கு குறிப்பிட்ட முன்மதியுடைய மற்றும் கடப்பாடுடைய தேவைப்பாடுகள் மீதான பொதுப் பணிப்புரை லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட் மற்றும் உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. |
| 2014 செத்தெம்பர் 30 | - | வங்கிகளின் அழுத்தப் பரீட்சிப்புக் கட்டமைப்பின் மீதான வழிகாட்டல்கள் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன. |
| 2014 ஒத்தோபர் 01 | - | முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டன. |

| | | |
|---|---|---|
| 2014 ஒத்தோபர் 09 | - | நகை அடகு முற்பணங்களுக்காக கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழான அடகு முற்பணங்களின் மீது பிரயோகிக்கக்கூடிய வட்டி வீதமானது ஆண்டிற்கு 15 சதவீதத்திலிருந்து ஆண்டிற்கு 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. |
| 2014 ஒத்தோபர் 10 | - | நிதியியல் துறை ஒருங்கிணைப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு வரித் தூண்டல்கள் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| 2014 ஒத்தோபர் 16 | - | ஏற்றுமதியாளர்களுக்கான கடன் வசதிகளை அறவிடுதல் தொடர்பாக வழங்கப்பட்ட சுற்றறிக்கை மீளப் பெறப்பட்டது. |
| 2014 நவெம்பர் 27 | - | வெளிநாட்டு உள்முகப் பணவனுப்பல்களை அறிக்கையிடல் தொடர்பான சுற்றறிக்கை உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. |
| 2014 திசெம்பர் 23 | - | 2016 சனவரி 01 இலிருந்து தொடங்கும் விதத்தில் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் முறையே ரூ.10 பில்லியன் மற்றும் ரூ. 5 பில்லியன் மைய மூலதனத்தைப் பேணவேண்டும் என்ற சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2014 திசெம்பர் 30 | - | நகை அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் செயற்பாடானது 2015 சனவரி 01 இலிருந்து 2015 யூன் 30 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. |
| | - | நகை அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டமானது உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. |
| 2015 சனவரி 01 | - | இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு திட்டத்தின் கீழ் ஒரு நிறுவனத்தின் ஒரு வைப்பாளருக்கான வைப்புக் காப்புறுதி உள்ளடக்கமானது ரூ.200,000 இலிருந்து ரூ.300,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2015 பெப்புருவரி 01 | - | அரச வங்கியினால் வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்டு 2015 சனவரி 31 அன்றோ அல்லது அதற்கு முன்போ செயற்படாக் கடன்களாக மாற்றம் செய்யப்பட்ட ஆகக் கூடிய ரூ.100,000 மதிப்புள்ள பயிர்ச்செய்கை கடன்களின் மூலதனத்தில் 50 சதவீதமானது தள்ளுபடி செய்யப்படுகின்றது. |
| 2015 மாச்சு 13 | - | 2015 சனவரி 16 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ரூ.1 மில்லியனை விஞ்சாது ஒரு ஆண்டு காலத்திற்கு இலங்கை ரூபாவில் நிலையான வைப்பினைத் திறந்துள்ள மூத்த பிரசைகளின் (60 வயதிற்கு மேற்பட்டோர்) சேமிப்புக்களுக்கு ஒரு ஆண்டிற்கு 15 சதவீத வட்டி வீதமானது வழங்கப்பட்டதுடன் 2015 சனவரி 16 இற்கு முன்னதாக ரூ.2.5 மில்லியன் வரை இலங்கை ரூபாயிலான நிலையான வைப்பினை திறந்த மூத்த பிரசைகளுக்கு (60 வயதிற்கு மேற்பட்டோர்) ஆண்டிற்கு 12 சதவீத வட்டி வழங்கப்பட்டது. |
| 2015 மாச்சு 15 | - | 2015 யூன் 30 அன்றோ அல்லது அதற்கு முன்போ அடகு முற்பணங்களை செலுத்துமிடத்து, அரச வங்கிகளால் வழங்கப்பட்டு 2015 சனவரி 31 அன்றோ அல்லது அதற்கு முன்போ செயற்படாக் கடன் வகைக்கு மாற்றல் செய்யப்பட்ட ரூ.200,000 இனை விஞ்சாது அடகு வைக்கப்பட்ட நகைகளுக்கான முற்பணம் மீதான 12 சதவீதத்தினை விஞ்சும் வட்டிக் கொடுப்பனவுகள் தளர்த்தப்பட்டன. |
| 2015 மாச்சு 31 | - | 2015 ஏப்பிறல் 01 இலிருந்து பாசல் III திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மைக் காப்பீடு விகிதத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டல்கள் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்டன. |
| **அடுத்து வருபவை** | - | பன்னாட்டுக் கட்டமைப்புடன் இணைந்து செல்லும் விதத்தில் பாசல் III மூலதன நியமங்களை அறிமுகப்படுத்துதல். |
| | - | சந்தைகள் மற்றும் ஏனைய உள்ளார்ந்த பொருளாதார அதிர்வுகளுக்கு வங்கித்தொழில் முறைமையின் வெளிப்பாட்டினை ஒழுங்குபடுத்தலுக்கு முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை விடுத்தல் |
| | - | திட்டக் கட்டமைப்பு மற்றும் நெருக்கடி முகாமைத்துவத்தினை வலுப்படுத்தல் |

**ஏனைய நிதியியல் நிறுவனங்கள்**

| | | |
|---|---|---|
| 2014 சனவரி 17 | - | முன்மொழியப்பட்ட நிதியியல் துறை ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டம் மீதான முதன்மைத் திட்டத்தினை இலங்கை மத்திய வங்கி அறிவித்தது. |

| | | |
|---|---|---|
| 2014 மார்ச்சு 31 | - | தவணை வைப்புக்கள், உரிமை மாற்ற முடியாத சேமிப்புச் சான்றிதழ்கள் மற்றும் படுகடன் கருவிகள் மீது உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளால் வழங்கக்கூடிய வட்டி வீதங்கள் தொடர்பான உயர்ந்தபட்ச வரையறைகள் திருத்தப்பட்டன. |
| 2014 யூன் 30 | - | 2014 யூலை 01 இலிருந்து மேலதிக அறிவுறுத்தல் கிடைக்கப்பெறும் வரை உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளால் வழங்கப்பட்ட தவணை வைப்புக்கள், உரிமை மாற்ற முடியாத சேமிப்புச் சான்றிதழ்கள் மற்றும் படுகடன் கருவிகளின் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீது 91 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் 2014இன் முதலாம் காலாண்டில் ஏற்புடைத்தான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினை பிரயோகிப்பதற்கான ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. |
| **ஏனையவை** | | |
| 2014 சனவரி 01 | - | கூட்டுக் காப்புறுதிக் கம்பனிகளின் பிரிவாக்கத்துடன் தொடர்புடைய ஒருபக்க கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான வணிகங்களின் தொடர்ச்சியாகக் கருதப்படுவதுடன் ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிக்கு வரி நடுநிலைமை தன்மையானது அதேயடிப்படையில் வழங்கப்பட்டது. |
| 2014 சனவரி 02 | - | இலங்கை காப்புறுதிச் சபை காப்புறுதியாளர்களிடையே பொதுவான உட்கட்டமைப்பினைக் கொண்டிருத்தலை அனுமதிப்பதற்காக, அத்தகைய பிரமாணங்களின் ஏற்புடைத்தன்மையினை இலங்கை காப்புறுதிச் சபையினால் வழங்கப்பட்ட பிரிவாக்க வழிகாட்டல்களினைக் கருத்திற்கொண்டு காப்புறுதிக் கம்பனிகளிற்கு பணிப்புரையொன்றை வழங்கியது. |
| 2014 சனவரி 30 | - | அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களுக்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைத் திட்டங்களின் 1267 (1999) கீழ் பயங்கரவாதத்தினை ஒடுக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலினைத் தடுத்தல் தொடர்பான அவர்களின் பொறுப்புக்கள் சார்ந்த சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2014 பெப்புருவரி 02 | - | நீண்ட காலக் காப்புறுதி தொழில் மற்றும் பொதுவான காப்புறுதித் தொழில் பிரிவாக்கத்திற்கு தேவைப்படும் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனியானது, காப்புறுதியாளராகப் பதிவு செய்யும் வேளையில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.100 மில்லியனை விடக் குறையாமல் வைத்திருக்கவும் அதன்பின் 2015 பெப்புருவரி 7இல் அல்லது அதற்குமுன் மூலதனத்தினை ரூ.500 மில்லியனுக்கு அதிகரிக்கவும் அனுமதித்து இலங்கை காப்பறுதிச் சபையின் ஒழுங்குகள் திருத்தப்பட்டன. |
| 2014 பெப்புருவரி 11 | - | பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடல் நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தான விண்ணப்பம், பதிவு மற்றும் வருடாந்த உரிமக் கட்டணம் என்பன திருத்தப்பட்டன. |
| 2014 ஏப்பிறல் 10 | - | சுயதொழில் மேம்படுத்தல் முன்னெடுப்பு கடன் திட்டத்தின் கீழுள்ள கடன்படுநர்களிற்கு பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படும் துணைக் கடன்களுக்கு ஏற்புடைத்தான ஆண்டிற்கான வட்டி வீதமானது 10 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் உச்ச துணைக் கடனின் அளவானது ரூ.250,000 இலிருந்து ரூ.500,000 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 2014 ஏப்பிறல் 11 | - | 2013 திசெம்பர் 12 மற்றும் 2013 திசெம்பர் 27 திகதியிடப்பட்ட பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்புரைகளுக்கமைவாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் வணிகம் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களுடனான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடப்பட்ட ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டன. |
| 2014 ஏப்பிறல் 24 | - | வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பதிவுகள் வழங்கப்பட்டும், அதனை ஆரம்பிக்காத அனைத்துப் பதிவு செய்யப்பட்ட முதலீட்டு முகாமையாளர்களுக்கும் இன்றிலிருந்து 6 மாத காலப்பகுதிக்குள் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு பணிப்புரை ஒன்றை வழங்கியது. |
| | - | குறைந்தளவு பொதுப் பங்குகளினை பொது உடமையின் பொதுவான வரைவிலக்கணமாகப் பேணுவதற்கு வழங்கப்பட்ட பணிப்புரையுடன் (எஸ்ஈசி/எல்ஈஜி/13/12/37) இணங்கி கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடப்பட்ட வரையறையில் குறிப்பிட்ட பொது உடமை வரைவிலக்கணத்தினை பின்பற்றுவதற்கும் இணைத்துக்கொள்வதற்கும் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு பணிப்புரை ஒன்றை வழங்கியது. |

| | | |
|---|---|---|
| 2014 யூன் 06 | - | புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் நிதியிடல் அளவானது அதிகரிக்கப்பட்டதுடன் இறுதிக் கடன்பெறுநருக்கான வட்டி மற்றும் அரசினால் செலுத்தப்படும் வட்டி உதவுதொகை ஆண்டொன்றிற்கு முறையே 7 சதவீதத்திற்கும் ஆண்டொன்றிற்கு 5 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. |
| 2014 யூன் 10 | - | இலங்கை காப்புறுதிச் சபையால் அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகர் கம்பனிகளுக்கு காப்புறுதி முகவர்களின் (தனிநபர்களுக்கானது தவிர்ந்த) பதிவினைப் பேணுமாறு சுற்றிக்கை ஒன்று வழங்கப்பட்டது. |
| 2014 யூன் 25 | - | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதியியல் நிறுவனங்களுக்கு, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் திட்டங்கள் 1373 (2001) இன் கீழ் பயங்கரவாதத்தினை ஒடுக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலினைத் தடுத்தல் தொடர்பான அவர்களின் பொறுப்புக்கள் சார்ந்த சுற்றறிக்கை மற்றும் பணிப்புரைகள் என்பன வழங்கப்பட்டன. |
| 2014 யூலை 07 | - | காப்புறுதி நிறுவனங்களுக்கு, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் திட்டங்களின் 1373 (2001) இன் கீழ் பயங்கரவாதத்தினை ஒடுக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலைத் தடுத்தல் தொடர்பான அவர்களின் பொறுப்புக்கள் சார்ந்த சுற்றறிக்கை மற்றும் பணிப்புரைகள் என்பன வழங்கப்பட்டன. |
| | - | பங்குத்தரகர்களுக்கு, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை திட்டங்களின் 1373 (2001) கீழ் பயங்கரவாதத்தினை ஒடுக்குதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலைத் தடுத்தல் தொடர்பான அவர்களின் பொறுப்புக்கள் சார்ந்த சுற்றறிக்கை மற்றும் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2014 யூலை 17 | - | வர்த்தகளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் உதவுதொகைத் திட்டத்தின் கீழ் பண்ணை அளவின் மீதான வரையறை 25 பசுக்களிலிருந்து 7 பசுக்களாகக் குறைக்கப்பட்டது. |
| 2014 செத்தெம்பர் 22 | - | இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் எல்லைக்குள் உள்ள பங்கு கொடுக்கல்வாங்கல்களைத் தீர்மானிக்கும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை சபையால் விதிக்கப்பட்டிருக்கும் விலைக் கட்டுப்பாட்டு பிரயோகத்தினைத் தளர்த்துவதற்கு பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் பணிப்புரை ஒன்று வழங்கப்பட்டது. |
| 2014 செத்தெம்பர் 24 | - | பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் கூறுநம்பிக்கைகளுக்கான ஒவ்வொரு நிதியத்திற்கும் எல்லா நேரங்களிலும் ஆகக் குறைந்தது 50 அலகு வைப்பாளர்களைப் பேணுவதற்கும் குறைந்தபட்ச விலைகளுக்கு அண்மிய நிபந்தனைகளை விதிப்பதற்கும் அவர்களை வழிமுறைப்படுத்துவதற்காக பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2014 ஒத்தோபர் 16 | - | கிழக்கு மாகாணத்தில் பொருளாதார நடவடிக்கைகள் மீளத் தொடங்குவதற்கான கடன் திட்டம் முடிவுறுத்தப்பட்டது. |
| 2014 ஒத்தோபர் 25 | - | வெளிநாட்டவர்களுக்கு காணியை குத்தகைக்குவிடுதல் அல்லது விற்றல் தொடர்பான விதிமுறைகளுக்கு காணி உரிமமாற்றல் சட்டமானது விடுக்கப்பட்டது. |
| 2014 நவெம்பர் 05 | - | சௌபாக்யா கடன் திட்டத்திற்கு பிரயோகிக்கக்கூடிய வட்டி வீதமானது ஆண்டிற்கு 9 சதவீதத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 8 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 2014 நவெம்பர் 18 | - | பல்வேறு கடப்பாடுகள் தொடர்பில் அனைத்து காப்புறுதி கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகர்கள் அவர்களது காப்புறுதி முகவர்களுடன் (தனிநபர்களைத் தவிர) எழுத்து மூல ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு, இலங்கை காப்புறுதிச் சபையானது அனைத்துக் காப்புறுதி கம்பனிகள் மற்றும் காப்புறுதி முகவர்களுக்கு பணிப்புரையினை வழங்கியது. |
| 2014 திசெம்பர் 03 | - | வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழுள்ள கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்படும் வட்டி வீதமானது ஆண்டொன்றிற்கு 8 சதவீதத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 6 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 2014 திசெம்பர் 23 | - | ஆரம்பப் பொது வழங்கலில் பங்குகளில் பட்டியலிட எதிர்பார்க்கும் கம்பனிகளின் முன்விபரணத்தில் வழங்கும் விலைக்கான அடிப்படை தொடர்பில் நிறுவனங்களின் வெளிப்படுத்தல்களைக் கட்டாயமாக்கிப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |
| 2014 திசெம்பர் 31 | - | படுகடன் பிணையங்களை பட்டியலிடுதல் தொடர்பான பட்டியலிடல் விதியில் குறிப்பிடப்பட்ட தரமிடல் தேவைப்பாடுகளைத் திருத்தியமைப்பதற்காக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையால் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. |